# DOWNFALL OF TRADITIONAL MEDICINE (LOCAL THERAPIST): SOCIOLOGICAL STUDY ON THE DIVISIONAL BASIS OF IRANDOTE SINHALESE

Lumna Noohu[1] and Hasna Banu Sahul Hameed[2]

[1,2]Department Of Sociology, South Eastern University of Srilanka

*lumnanoohu@gmail.com*

**ABSTRACT**

*The science has developed after Industrial revolution. The role of science is immeasurable in the field of medicine. Eventhough most of the people don't get the full advantages from the field of medical science. But still they follow the handed down Hearsay medical methods. It is called the " Indiginious Medicine ". In Sinhala we call it as "sinhala wedageama".This medical method is the most famous and hereditary amoung the Sinhalese. Early period, this method was the solution for every disease. Now a days elderly people belive in this method . But the new generation don't have much belives in these medical methods . Srilankan government also joint with health ministry and made planning to protect this medical method. Eventhough it's a endangered medical method .Here it is the research problem. That mean why this " Sinhala Wedagama" is destroying in this research area?.The objective of this research are to find out the indiginious Sinhala medicine methods in the Rattota area for reason for the destruction. The collection of the data for the research based on Qualititative method and the primary , secondary Data method. Primary Data consist of Interwiew , Observation , Focus Group Discussion . Secondary Data are Internet information , Books and Papers . Local therapist do the medicine only for the Strain, Arthritis, Burns, Joint pain, Eye pain, Ear, Throat, Cough, Phlegm, Vomiting, Wheezing, Lumps, Snake venome and Headache .Though this research we have identified that the inheritor of the local therapist of this divisional area not interested in this traditional medicine.*

**Keywords** : Indiginious Medicine, Local therapist, Sinhala Wedagama, Wedamahathaya, Disease

## ஆய்வின் அறிமுகம்

ஆரம்பக் காலங்களில் மனிதன் தனக்கு நோய் ஏற்பட்டபோது சூழலில் உள்ள பொருட்கள் மீதே தன் கவனத்தை செலுத்தினான். அதாவது ஒவ்வொரு நோய்களுக்கும் சூழலில் காணப்படுகின்ற இயற்கை மூலிகைகள், தாவரங்களை பயன்படுத்தி மருந்து செய்தான். இன்றும் கூட கிராமிய மக்களிடம் இந்த நடைமுறை காணப்படுகின்றது. இலங்கையில் மருத்துவ துறை தொடர்பபான வரலாறு 2000 ம் ஆண்டு பழமையானது. அதாவது பௌத்த வம்ச ஆட்சியாளர்களிலிருந்து தொடர்ந்து வருவதாக கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது (பிரனான்ந்து,ஜோ,1994).

அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற பண்டைய இராசதானி காலந்தொட்டு இதற்கான ஆதாரங்கள் கானப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பக் காலங்களில் அரசர்கள்

பெரும்பாலும் பண்டைய கல்வெட்டுக்கள், கையால் எழுதப்பட்ட ஓலைச் சுவடுகள் மற்றும் பிக்குமார்களால் பின்பற்றப்பட்டடு வந்த வைத்திய முறைகள் எள்பவற்றைக் கொண்டே பாரம்பரிய வைத்திய முறைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது (பிரனான்ந்து,ஜோ,1994).

வைத்தியர் சி.ஜி.ஊருகொட அவர்கள் ''இலங்கையின் பாரம்பரிய வைத்திய முறைகளின் வரலாறு'' என்ற நூலில் இலங்கையில் காணப்பட்ட பாரம்பரிய வைத்திய முறைகள் தொடர்பான விரிவான விளக்கங்களை வழங்கியுள்ளார். புலஸ்தி இராவணன் காலத்தில் இருந்தே இந்த நாட்டுக்கே உரிய வைத்திய முறையொன்று இருந்ததுடன் இது புத்தர் காலத்தில் புத்த பிக்குகள் மூலம் பரவியதாகவும் வைத்திய அறிவு வளர்ச்சி அடைந்ததாகவும் வரலாறுகள் மூலம் தெரிய வருகிறது (சாலிந்த திசாநாயக்க, முன்னால் மருத்துவத் துறை அமைச்சர்).

பண்டைய புராதன கால அரசர்கள் பாரம்பரிய வைத்திய முறைகளை மேற்கொள்வதில் வல்லுனர்களாக காணப்பட்டனர். இன்றும் கூட இந்தியாவில் பயன்படுத்தப்படுகின்ற நிறைய மூலிகை வகைகள் இலங்கையைச் சார்ந்ததாகும். இராமன் - இராவணனுக்கு இடையில் ஏற்பட்ட யுத்தங்களில் காயமுற்ற படைவீரர்களுக்கு இமய மலையில் இருந்து மூலிகைகள் கொண்டு வரப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. எங்களுக்குரிய பாரம்பரிய வைத்திய முறையொன்று இருந்ததாக இராவணன் காலத்தை பார்க்கும் பொழுது தெரிய வருகிறது (குணவர்தன,டி.எஸ்,எஸ்,1994).

சுதேச வைத்திய முறைகளுள் வேடர்களின் வைத்திய முறைகளும் அடங்கும். இவர்கள் ஆரம்பக்காலங்களில் வைத்திய முறைகள் தொடர்பாக எந்த அறிவினையும் பெற்றிருக்கவில்லை என்றும் சில நோய்கள் ஏற்படும் போது அது பூதங்களினால் ஏற்படுகின்றது என்ற நம்பிக்கை அவர்களிடம் காணப்படடதாக வரலாறு கூறுகின்றது. அத்தோடு வேடர்கள் தொற்று நோய்களுக்காக மரங்களில் உள்ள பட்டைகளை நீரில் கலந்து குடிப்பது வழக்கமாக இருந்ததாக 1879 இல் ஹாட்போசோன் என்பவர் தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார் (குணவர்தன,டிஎஸ்.த.எஸ்,1994).

ஆரம்பக்காலங்களில் வேடர்கள் மூலிகைகள் தொடர்பாகவும் எந்த அறிவினையும் பெற்றிருக்கவில்லை. பிறகு தமிழ் மற்றும் சிங்கள மக்களோடு தொடர்புகளை வளர்த்த பிறகே மூலிகைகள் தொடர்பான அறிவினை பெற்றார்கள். 1920 இல் வேடர்கள் தொடர்பாக எழுதிய ஸ்பிட்ல் வேடர்களுக்கு மூலிகைகள் தொடர்பான நம்பிக்கை இருந்ததாக ஆராய்ச்சிகள் மூலம் கண்டறிந்துள்ளார் (குணவர்தன,எஸ்.த.எஸ்,1994).

ஆயுர்வேத வைத்திய முறை இலங்கைக்கு வருவதற்கு முன்பு இருந்த வைத்திய முறையாக பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வந்த ''சுதேச வைத்திய முறையான சிங்கள வைத்தியம்'' என்பதனை குறிப்பிட முடியும். விசேடமாக குடும்பத்தினை பாதுகாக்கும் வைத்திய முறையாக ஆரம்பக்காலங்களில் சிங்கள வைத்தியம் காணப்பட்டதாக அறிய முடிகிறது. தற்காலத்திலும் கூட இந்த வைத்திய முறைகளை பின்பற்றும் நாட்டு வைத்தியர்கள் (வெதமஹத்தியா) உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பக்காலங்களில் சிங்களவர்களுக்கு மத்தியில் நடைமுறையில் காணப்பட்ட நாட்டு வைத்திய முறைகள் தான் ஆயுர்வேத வைத்திய முறைகளின் தோற்றுவாய்க்கு வழிகோலியது. முன்னைய காலங்களில் நாட்டு வைத்தியர்களுக்கு என்று சமூகத்திலும் அரச சபைகளிலும் தனி இடம் காணப்பட்டது. மக்கள் அதிகமாக ஆரம்பக் காலங்களில் சிங்கள வைத்திய முறைகளில் அதிக நாட்டம் கொண்டவர்களாக காணப்பட்டனர். ஒவ்வொரு மூலிகைகளினதும் பலன்களை நன்கு அறிந்து வைத்திருந்தார்கள். மூலிகைகளைக் கொண்டு எவ்வாறு வைத்தியம் செய்யலாம் கசாயம், எண்ணெய் போன்றவற்றை எவ்வாறு காய்ச்சலாம் என்பது தொடர்பான அறிவு ஆரம்பக் கால

சிங்கள மக்களிடம் இருந்தாலும் அவற்றின் செய்முறையை யாரிடமும் அவர்கள் சொல்ல விரும்பவில்லை. அதாவது அவ்வாறு சொன்னால் நோய் குணமடையாது என்ற நம்பிக்கை வேடர்களிடமும் காணப்பட்டது. இவ் வைத்திய முறையை ஆரம்பக்காலங்களில் பரம்பரை பரம்பரையாகசெய்து வந்தனர்.

ஆய்வு பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் பெரும்பாண்மையாக சிங்களவர்கள் இருந்தாலும் அனைவரிடமும் சிங்கள வைத்தியம் தொடர்பான பூரண அறிவு இல்லை என்றே கூறலாம். குறிப்பிட்ட சிலர் மாத்திரமே அவர்களின் முன்னோர்கள் சொல்லி கேட்டதை அறிந்து இன்றும் தொடர்ந்து செய்துக் கொண்டு வருகிறார்கள். இருப்பினும் அவர்கள் அதனை பிரதான தொழிலாக செய்யவில்லை. தேவையின் போது மாத்திரமே செய்கின்றனர். ஆதலால் இறத்தோட்டை பிரதேச சிங்களவர்களுக்கு மத்தியில் காணப்பட்ட சிங்கள வைத்திய முறைகள் தற்பொழுது அழிந்து செல்கின்ற நிலைப்பாடு காணப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

சிங்கள மன்னர்களின் ஆட்சிக்காலம் தொட்டு அதற்கு பிற்பட்ட காலங்களிலும் சிங்களவர்களுக்கு மத்தியில் ''சிங்கள வைத்தியம்'' நடைமுறையில் காணப்பட்டது. பிறகு பல்வேறு வைத்திய முறைகள் குறிப்பாக ஆயுர்வேதம், யூனானி, சித்த மருத்துவம் போன்ற மருத்துவ முறைகளின் வருகையினால் சிங்கள வைத்திய முறைகள் அழிவடைந்து சென்று விட்டன. இலங்கை அரசாங்கமானது சுதேச வைத்திய முறைகளை பாதுகாப்பதற்கு சுகாதார அமைச்சோடு இணைந்து பல திட்டங்களை மேற்கொள்கின்ற போதிலும் ஆய்வுப் பிரதேசத்தில் சுதேச சிங்கள வைத்திய முறைகள் அதாவது ''சிங்கள வெதகம்'' ஏன் அழிந்து வருகின்றது என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக காணப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வானது இறத்தோட்டை பிரதேசத்தில் சிங்களவர்களுக்கு மத்தியில் காணப்பட்ட சுதேச சிங்கள வைத்திய முறைகளை அடையாளங் காண்பதோடு அவை நலிவடைந்து சென்றமைக்கான காரணங்களை வெளிக்கொண்டு வருவதும் பிரதான நோக்கமாக உள்ளது.

**ஆய்வு முறையியல்**

பண்பு ரீதியான பகுப்பாய்வாக இவ்வாய்வு அமைகின்றதுடன் இதற்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டடுள்ளன. மேலதிக தரவுகள் பிரதான தகவலாளியிடம் (Key Informants) இருந்து நேர்காணல் (Interview) மூலம் பெறப்பட்டுள்ளன. பின்வரும் அடிப்படையில் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

1. நாட்டு வைத்தியர்கள் - 04
2. வைத்தியர்கள் - 02
3. நாட்டு வைத்தியர்களின் பிள்ளைகள் .- 05

மேலும் நாட்டு வைத்தியர்கள்இ வைத்தியர்கள், நாட்டு வைத்தியர்களின் பிள்ளைகள் உள்ளடக்கி ஒரு இலக்குக் குழு கலந்துரையாடல் ( Focus Group Discussion )

மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு களத்திற்கு சென்று அவதானம் (observation) மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரித்தலில் புத்தகங்கள், இதழ்கள், கட்டுரைகள், இணையத்தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள பல்வேறுப்பட்ட ஆய்வுகள், நூல்கள் ஆய்வுகளுக்கு உதவும் எனும் கண்ணோட்டத்தில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனூடாக ஆய்வினைத் தெளிவுப்படுத்தவும், ஆய்வினைச் சிறந்த முறையில் வடிவமைக்கவும் ஆய்வு தொடர்பான மேலதிக அறிவினையும் பெறவும் முடிந்தது.

பியசிரி அம்லசித் யாபா நீதானி ராஜபக்ஸ,(1995) என்பவரால் வெளியிடப்பட்ட ''தேசிய அத் பெஹெத்'' எனும் நூலில் கண், தலை, மூக்கு, காது, தொண்டை, இருமல், சளி, செங்கமாலை, வாந்தி, நீரிழிவு, இளைப்பு, மந்தப்போசனம், சிறுநீர் தொடர்பான நோய்கள், கால், பாதம் தொடர்பான நோய்கள், சுளுக்கு, வாதம், புண், காய்ச்சல், கட்டிகள், பாம்பு விசம், ஆண் பெண் தொடர்பான நோய்கள், சரும நோய்கள் என அனைத்து வகையான நோய்களுக்கும் சிங்கள வைத்திய முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடப்ட்டுள்ள அனைத்து நோய்களுக்கும் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள நாட்டு வைத்தியர்கள் வைத்தியம் செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு ஆய்வோடு தொடர்பான விடயங்கள் நேரடியாக இதில் குறிப்பிடப்படவில்லை.

குணவர்த்தனஇடி.எஸ்.த.எஸ்(1994) என்பவரால் எழுதப்பட்ட ''ஸ்ரீ லங்காவே வைத்திய சாஸ்திர இதிஹாசய''என்ற நூலில் சிங்கள வைத்திய முறையின் வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது மன்னர் காலங்களில் எவ்வாறு சிங்கள வைத்திய முறைகள் காணப்பட்ட முறை அத்தோடு ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யூனானி மருத்துவம் போன்ற மருத்துவ முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மகாவம்சத்தில் சிங்கள வைத்தியம் தொடர்பாக குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் பிரித்தானியர், போர்த்துகேயர், ஆங்கிலேய ஆட்சிக் காலங்களில் சிங்கள வைத்திய முறைகளின் நிலைப்பாடு தொடர்பாக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த ஆய்வுப் பிரதேசமான இறத்தோட்டை பற்றிப் பேசப்படவில்லை.

டெனிஸ்டர்இஎல்இபெரேரா (2001) ''வட்டோருவ'' என்ற நூலில் சிங்கள வைத்திய முறைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் எவ்வாறான சிங்கள வைத்திய முறைகள் காணப்படுகின்றன என்பது தொடர்பாக குறிப்பிடப்படவில்லை.

பீரிஸ் சில்ங்யிய்ரோஇ சி (2017) என்பவர் எழுதிய "Buddhism and medicine An Anthology Of Premodern Sources "என்ற புத்தகத்தில் பௌத்தம் மற்றும் அதனோடு தொடர்பான வைத்திய முறைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வோடு தொடர்பான விடயங்கள் இங்கு நேரடியாக ஆய்வு செய்யப்படவில்லை.

"SriLankan traditional medicine"(https://en.m.wikipedia.org) என்ற இணையத்தளப் பகுதியில் சுதேச சிங்கள வைத்திய முறைகள் மற்றும் ஆயுர்வேதம்

தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தை மையப்படுத்தி எந்தத் தகவலும் குறிப்பிடப்படவில்லை.

“சுதேச மருத்தவ முறை நலிவடைந்துள்ளது.”(http://kathiravan.com) என்ற இணையத்தளப் பகுதியில் சிங்கள வைத்திய முறைகள் இலங்கையில் நலிவடைந்து சென்றமைக்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் பாரம்பரிய சிங்கள வைத்திய முறைகள் நலிவடைந்து சென்றமைக்கான காரணங்கள் குறிப்பிடப்படவில்லை.

“இலங்கையின் சுதேச மருத்துவத்திற்கு சர்வதேச சட்டப்பாதுகாப்பு அமைச்சர் ரிசாட் பதியூதின் தெரிவிப்பு”(http://srilankamuslims.lk) இலங்கையின் பாரம்பரிய சுதேச மருத்தவ முறையை பாதுகாப்பதற்கு ஜெனிவாவோடு இணைந்து மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தை மையப்படுத்தி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

“ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவ முறையின் முன்னேற்றத்திற்குத் தேவையான வளங்கள் குறைவின்றிப் பெற்றுக்கொடுக்கப்படும் - ஜனாதிபதி”(www.president.gov.lk) என்ற இணையத்தளப் பகுதியில் சுதேச வைத்திய முறைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் சுதேச வைத்திய முறைகளை கட்டியெழுப்புவதற்கான திட்ங்கள் தொடர்பாக எந்தத் தகவலும் குறிப்பிடப்படவில்லை.

“2014 ஆம் ஆண்டுக்கான சுதேச வைத்திய அமைச்சு”(www.parliment.lk)என்ற இணையத்தளப் பகுதியில் சுதேச சிங்கள மருத்தவம் மற்றும் ஆயுர்வேத மருத்தவ முறையை முன்னேற்றுவதற்கான செயற்திட்டங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தை மையப்படுத்தி எந்தத் தகவலும் குறிப்பிடப்படவில்லை.

“The Ministry Of Indigenous Medicine ” (www.indigienousmedimini.com) என்ற இணையத்தளப் பகுதியில் சுதேச வைத்திய முறைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வை மையப்படுத்தியாக எதுவும் பேசப்படவில்லை.

எனவே இலக்கிய மீளாய்விற்காக எடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் இணையத்தள பகுதிகளும் இலங்கையைப் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவே உள்ளன. ஆனால் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மாத்தளை மாவட்டத்தின் இறத்தோட்டை பிரதேசத்தை மையப்படுத்தி இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இந்த ஆய்வு இடைவெளியினை நிவர்த்தி செய்யும் முகமாகவே இவ் ஆய்வு இடம்பெற்றுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**

ஆய்வுக்காக தெரிவுச் செய்யப்பட்டுள்ள இறத்தோட்டை பிரதேசமானது இலங்கைத்தீவின் அழகிய ஆறுகளையும் வயல்வெளிகளையும் மற்றும் மலைகளையும் கொண்ட மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இறத்தோட்டை பிரதேசத்தில் பௌத்தர்களே பெரும்பாண்மையினராக வாழ்வதோடு முஸ்லிம் மற்றும் தமிழர்கள் சிறுபாண்மையினராக வாழ்கின்றனர். இங்கு சுமார் 500 க்கும் மேற்பட்ட பௌத்த குடும்பங்கள் வாழ்கின்றனர். இங்கு விகாரை, கோவில், பள்ளிவாயல் மற்றும் கிறிஸ்தவ ஆலயமும் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் கல்வி நிலையினை எடுத்து நோக்குகையில் தற்பொழுது கல்வியானது இங்கு மிக உயர்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. தமிழ் மொழிப்பாடசாலை மற்றும் சிங்கள மொழிப் பாடசாலைகள் இருப்பதோடு ஒரு முஸ்லிம் பாடசாலையும் உள்ளது. ஆய்வுப்

பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கையில் விவசாயம், வியாபாரம் என்பன பிரதான பொருளாதார நடவடிக்கைகளாக இருப்பதோடு அரச தொழில்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் இதர பொருளாதார நடவடிக்கைகளாகும்.

இப்பிரதேசத்தில் ஆரம்பக் காலங்களில் சிங்களவர்கள் அதிகமாக சிங்கள வைத்திய முறையில் அதிக நாட்டம் கொண்டவர்களாக காணப்பட்டனர். பலர் அதனை பரம்பரை பரம்பரையாக செய்து வந்தனர். ஆனால் சிங்கள வைத்திய முறைகளை அறிந்த முன்னோர்கள் மரணித்ததன் பின்னர் அவ் வைத்திய முறைகள் கவனிப்பாரற்று போயின. அதாவது குறிப்பிட்ட சில பரம்பரையோடு நின்றுவிட்ட நிலையை இப் பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இப்பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் தற்பொழுது 04 பேர் மட்டுமே பாரம்பரிய சிங்கள வைத்திய முறையை தெரிந்து வைத்துள்ளனர். இருப்பினும் அவர்களும் முழுமையான விபரங்கள் ஏதும் அறியாத நிலையில் ஓரிரு வைத்திய முறைகளையே மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக சுளுக்கு, வாதம், தீக் காயங்கள், மூட்டுவலி இவற்றுக்கு மாத்திரமே நாட்டு வைத்தியர்கள் வைத்தியம் செய்கின்றனர். இது தவிர கண் வலி, காது, தொண்டை, இருமல், சளி, வாந்தி, நீரிழிவு, இளைப்பு, கட்டிகள், பாம்பு விசம், தலை வலி போன்ற நோய்களுக்கு நாட்டு வைத்தியர்கள் வைத்தியம் செய்வதோடு கண் வலி, காது, தொண்டை, இருமல், சளி, வாந்தி, நீரிழிவு, இளைப்பு, வயிற்றுவலி போன்ற நோய்களுக்கு வீடுகளிலும் சிங்கள வைத்தியம் மேற்கொள்ளப்படுவதை அறிய முடிந்தது.

**ஆய்வு முடிவுகளும் கலந்துரையாடல்களும்**

இறத்தோட்டை பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் ஆரம்பக்காலங்களில் சுதேச வைத்திய முறைகளுள் ஒன்றான சிங்கள வைத்திய முறை சிங்களவர்களுக்கு மத்தியில் நடைமுறையில் காணப்பட்டது. இதனை மேற்கொள்பவர்கள் சிங்கள மொழியில் ''வெதமஹத்தியா'' என அழைக்கப்பட்டனர். ''சிங்கள வெதகம்'' ஆரம்பக்காலங்களில் மக்கள் மத்தியில் பிரபல்யமாகி காணப்பட்டது.

இதனை சிலர் பரம்பரை தொழிலாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது சிங்கள வைத்திய முறையை எல்லோராலும் கற்றுக் கொள்வது இயலுமான விடயமல்ல. ஒரு தலைமுறையில் இவ் வைத்திய முறையை தெறிந்த ஒருவர் தனது அடுத்த தலைமுறையில் யாரிடம் இவ் வைத்திய முறையை ஒப்படைக்கலாம் என முடிவெடுத்து இதற்கு பிறகு இது உன்னுடையது என தலையில் கை வைத்து சத்தியம் செய்தால்தான் அவ் வைத்தியத்தை குறிப்பிட்ட நபரால் மேற்கொள்ள முடியும்.

இறத்தோட்டை பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் இவ் சிங்கள வைத்திய முறையை தெரிந்த சில முன்னோர்கள் இது தொடர்பாக எந்தவொரு விடயத்தையும் அடுத்த தலைமுறையினருக்கு சொல்லிக் கொடுக்கவில்லை. அத்தோடு எந்தவொரு ஏடுகளிலும் மருத்துவ குறிப்புக்களை எழுதி வைக்க தவறிவிட்டார்கள். ஒரு சிலர் முன்னோர்கள் செய்த வைத்திய முறையை அவதானித்து தெரிந்துக் கொண்டார்களே ஒழிய முறைப்படி முன்னோர்கள் தலையில் சத்தியம் செய்து அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்கவில்லை.

அத்தோடு தமக்கு தெரிந்த வைத்திய முறையை சொல்லிக் கொடுத்தால் அவ் வைத்தியம் பழிக்காது என்பது ஐதீகம். ஆரம்பக்காலங்களில் ஒருவர் சிங்கள வைத்தியம் செய்தால் அவருக்கு நன்றிக் கடனாக வெற்றிலையில் பத்து ரூபா அல்லது இருபது ரூபாவை வைப்பது வழக்கமாக இருந்தது. அல்லது தன்னால் இயலுமான பணத்தை காணிக்கையாக வழங்கினர்.

தற்பொழுது அவ்வாறில்லாமல் சில நோய்களை குணப்படுத்துவதற்களக கூடுதலான தொகையை நாட்டு வைத்தியர்கள் (வெதமஹத்தியா) பெற்றுக்கொள்கின்றனர். குறிப்பாக சில மருந்துகளை செய்வதற்கு தேவையான மூலிகைகள் வாங்குவதற்கு பணம் செலவாகுவதனால் பெரும் தொகை அறவிடப்படுகிறது.

D.G.சோமரத்ன என்ற நாட்டுவைத்தியரிடம் கேட்டப்போது “ நான் ஐந்து வருடம் போல் பணம் இல்லாமல் வைத்தியம் செய்தேன். ஆனால் தற்பொழுது சில மருந்து மூலிகைகளை பெற்றுக் கொள்வதற்கு செலவாகுவதனால் தற்பொழுது 8,000 ரூபா வரை பெற்று வைத்தியம் செய்கின்றேன். ”என்றார்.

இறத்தோட்டை பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் தற்பொழுது நான்கு பேர் சிங்கள வைத்திய முறையை செய்கின்றார்கள். அவர்களுல் K.G.ஜயவர்தன, D.G.சோமரத்ன, K.G.சந்திராவதி, பிஸோமெனிக்கே போன்றோர் காணப்படுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் சுளுக்கு, மூட்டுவைத்தியம், தீக்காயங்கள், உடலில் ஏற்படுகின்ற கட்டிகள், வாதம் போன்றவற்றிற்கு அதிகமாக சிங்கள வைத்தியம் செய்கின்றார்கள்.

பிஸோ மெனிக்கே என்ற சிங்கள வைத்தியம் செய்பவரிடம் நேர்காணல் மேற்கொண்டப் போது சிங்கள வைத்தியம் தொடர்பாக பின்வரும் விடயங்களை அறிந்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

இவர் தன்னுடைய தந்தை P.G ரதனப்பு மூலமே சிங்கள வைத்திய முறையை கற்றுக் கொண்டதாக குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தன்னுடைய தந்தை கண்களில் ஏற்படக் கூடிய உபாதைகளுக்கும் கூட சிங்கள வைத்தியம் செய்துள்ளார் எனினும் தற்பொழுது அவ்வாறு கண்களுக்கு வைத்தியம் செய்வது ஆபத்தானது என்றார். அத்தோடு தான் சுளுக்கு, தீக்காயங்கள் போன்றவற்றிற்கு மட்டும் தான் சிங்கள வைத்தியம் செய்வதாக குறிப்பிட்டார்.

சுளுக்கு ஏற்பட்டால் எவ்வாறு சிங்கள வைத்தியம் மேற்கொள்ளப்படுகிறது எனக் கேட்டப் போது விளக்கெண்ணெய் கொண்டு சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் தடவி விரல்களால் பிடித்து சரிசெய்ய வேண்டும் என்றார். ஆனால் இதனை அனைவராலும் செய்ய முடியாது. அதற்கென சில நுட்பங்கள் காணப்படுவதோடு அதனை முறைப்படி கற்றிருக்க வேண்டும் என்றார்.

K.G. ஜயவர்தன என்ற நாட்டு வைத்தியரை சந்தித்தப் போது சிங்கள வைத்திய முறையை தந்தை K.G.போதா மூலமே கற்றுக் கொண்டதாக குறிப்பிட்டார். அத்தோடு தான் இதனை முழுநேர தொழிலாக அன்றி தன்னை நாடி வருபவர்களுக்கு மட்டுமே செய்வதாக குறிப்பிட்டார். இவர் ஒரு விவசாயி மற்றும் மேசன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் மிருக வைத்தியம் (ஆடு,மாடு) மற்றும் தீக்காயங்களுக்கும் சிங்கள வைத்தியம் செய்வதாக குறிப்பிட்டார். இவரிடம் சிங்கள வைத்திய முறை நடைமுறையில் மருவி சென்றமைக்கான காரணத்தை கேட்டப் போது அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். “நானும் எனது அக்காவும் எனது தந்தையிடமிருந்து (K.G.போதா) கற்றுக் கொண்டோம். ஆனால் என்னுடைய பிள்ளைகள் இதனை கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் எனக்குப் பிறகு இவ் வைத்தியம் என் பரம்பரையில் அழிந்துவிடும் நிலைமை காணப்படுவதாக கவலையுடன் குறிப்பிட்டார்.

இவருடைய அக்கா மு.பு.சந்திராவதி ஒரு நாட்டு வைத்தியர் ஆவார். இவர் சுளுக்குக்கு மாத்திரம் சிங்கள வைத்தியம் செய்கிறார். இவரிடம் சிங்கள வைத்திய முறை மருவி சென்றமைக்கான காரணத்தை கேட்டப் போது அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். “சிங்கள வைத்தியம் மூலம் நோய் குணமடைவதற்கு நீண்ட நாள் எடுக்கும் ஆனால்

மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் எளிதில் குணமடைவதற்கு வாய்ப்பு காணப்படுகிறது இதனால் மக்கள் அதில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர் ” என்றார்.

D.G.சோமரத்ன என்ற நாட்டு வைத்தியரை சந்தித்தப் போது சிங்கள வைத்திய முறை தொடர்பாக பல புதிய விடயங்களை அறிந்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இவரிடம் சிங்கள வைத்திய முறையை எவ்வாறு கற்றுக் கொண்டீர்கள் எனக் கேட்டப் போது கனவின் மூலம் தனக்கு இவ் வைத்திய முறை தொடர்பான ஞானம் கிடைத்ததாக குறிப்பிட்டார். அதாவது 20 அல்லது 25 வருடங்களுக்கு முன்பு தனது கன்னத்தில் கட்டி ஒன்று ஏற்பட்டிருந்தது. ஒரு நாள் காலையில் நித்திரை விட்டு எழும்பும் போது தான் தூங்கிக் கொண்டிருந்த இடத்திற்கு பக்கத்தில் மருத்துவ குறிப்புக்கள் உள்ள ஒரு புத்தகம் இருந்ததாகவும் குறிப்பிட்டார். அத்தோடு தன்னுடைய வீட்டு முற்றத்தில் மூலிகை செடியொன்றும் இருந்ததாக குறிப்பிட்டார். தற்பொழுது அந்தப் புத்தகம் தொலைந்து விட்டது என்றார்.

இவர் மூலைவியாதிக்கு சிங்கள வைத்தியம் செய்வது குறிப்பிடத்தக்கது. மேலும், இவர் கூறுகையில் தான் 05 வருடமாக தன்னை நாடி வருபவர்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்ததாகவும் தற்பொழுது மூலிகைகளின் விலை அதிகரித்து விட்டதால் அண்மையில் தன்னை நாடி வந்த ஒருவரிடமிருந்து 8,000 ரூபா வரை பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு இவர் இதனை உத்தியோக பூர்வமாக பதிவு செய்து வருங்காலங்களில் சிங்கள வைத்திய முறையை பெரியளவில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டார். ஆனால் இவர் ஒரு மேசன் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இதுவரையில் 200 க்கு மேற்பட்டவர்களுக்கு வைத்தியம் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும், கூறுகையில் இவர் தனக்கு தெரிந்த சிங்கள வைத்தியம் ஒன்றை பிக்கு ஒருவருக்கும் சொல்லிக் கொடுத்ததாக குறிப்பிட்டார்.

இவரிடம் சிங்கள வைத்திய முறை அழிந்து சென்றமைக்கான காரணத்தை கேட்டப் போது “ தற்கால இளைஞர் சமுதாயம் சிங்கள வைத்திய முறையை கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் குறிப்பிட்ட பரம்பரையோடு இவை நின்று விடுகிகின்றது.” என்றார்.

இறத்தோட்டை பிரதேச நாட்டுவைத்தியர்களை நேர்காணல் மேற்கொண்டப் போது இப் பிரதேசத்தில் எவ்வாறான நோய்களுக்கு மக்கள் வீடுகளிலேயே சிங்கள வைத்திய முறைகளை மேற்கொள்கிறார்கள் என்பதை அறிய முடிந்ததோடு அவற்றுக்கான மருத்துவ குறிப்புக்களையும் அறிய முடிந்தது. குறிப்பாக இறத்தோட்டை பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் வயிற்று வலி, சளி, நீரிழிவு, அஜீரணம், தலைவலி, சுளுக்கு, பல்வலி, வாந்தி, கண்கட்டி, வாதம், வீக்கம், இழைப்பு என அனைத்து விதமான நோய்களுக்கும் வீடுகளில் சிங்கள வைத்திய முறையே பின்பற்றப்படுகிறது. அவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

வயிற்றுவலி : வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் சேர்த்து குடிக்க வேண்டும் அல்லது தேசிக்காய் புளியில் இஞ்சி தேன் கலந்து குடித்தல்.

தலைவலி : அரலி பால், வினாகிரி இரண்டையும் கலந்து புடவைத் துண்டில் கட்டி நெற்றியில் வைக்க வேண்டும்.

பல்வலி : முள்முருங்கையோடு கற்பூரத்தை தேனில் அரைத்து பூசுதல் அல்லது நொச்சி இலையை சூடாக்கி பல்வலி உள்ள இடத்தில்வைத்தல்.

அஜீரணம் : திப்பிலி, வில்வம், சுக்கு நான்கு எடுத்து தண்ணீரில் இட்டு இரண்டு கோப்பை குடித்தல்.

வாந்தி : இஞ்சி, கரும்புப்பாணி, சாம்பு வாழை அணைத்தையும் சேர்த்து குடித்தல்.

சுளுக்கு : விளக்கெண்ணெய்யோடு உப்பையும் சூடாக்கி பூசுதல்.

வாதம் : இழுப்பெண்ணெய்யோடு கற்பூரத்தை பற்ற வைத்து பொடி செய்து வெயிலில் வைத்து வலி உள்ள இடத்தில் தேய்த்தல்.

வீக்கம் : சுண்ணாம்போடு கொரகாவை சிறுநீரில் அரைத்து வீக்கம் உள்ள இடத்தில் தேய்த்தல்.

வயிறுஇ நெஞ்சு எறிவு : கொத்தமல்லியை தட்டி சுடுநீரில் மூடிவைத்து காலையில் குடித்தல்.

கண்கட்டி : சிறுநீரை கண்களை சுற்றி தேய்த்தல்.

செங்கமாலை : வேப்பம் இலையை தேனில் கலந்து அரை கப் குடித்தல்.

இழைப்பு : மிளகுஇ சுக்குஇ திப்பிலிஇ பெருங்காயம் இவற்றை கசாயம் காய்த்து அவற்றை மூன்று தடவை வடித்து பொடி செய்து குடித்தல்.

பொதுமக்களிடம் சிங்கள வைத்திய முறை தொடர்பாக கேட்டப் போது அவர்கள் பின்வருமறு குறிப்பிட்டனர். ''ஆரம்பக்காலங்களில் வயிற்று வலி, சளி, நீரிழிவு, அஜீரணம், தலைவலி, பல்வலி, கண்கட்டி, வாதம் போன்ற எந்தவொரு வியாதிக்கும் சிங்கள வைத்திய முறை மூலம் குணப்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆனால் தற்பொழுது மக்களிடம் உள்ள உணவு பழக்கவழக்கங்கள் காரணமாக சிங்கள வைத்திய முறைகள் மூலம் குணமடையாத நிலைப்பாடு காணப்படுகிறது. அத்தோடு அவற்றை செய்யவும் பயமாக உள்ளது. '' என்கின்றனர்.

**சிங்கள வைத்திய முறைகள் நலிவடைந்து சென்றமைக்கான காரணங்கள்**

இறத்தோட்டை பிரதேசத்தில் உள்ள நாட்டு வைத்தியர்களை நேர்காணல் மேற்கொண்டப் போது சிங்கள வைத்திய முறை நலிவடைந்து சென்றமைக்கான காரணங்களை கண்டறிய முடிந்தது.

- ❖ மூதாதையர்கள் மரணித்து போனமை.
- ❖ முன்னோர்கள் தமக்கு தெரிந்த வைத்திய முறையை தம் வழிவந்தோருக்கு சொல்லிக் கொடுக்காமை.
- ❖ மூதாதையர்கள் ஒருவரின் தலையில் கைவைத்து இந்த வைத்திய முறையை உன்னிடம் ஒப்படைக்கிறேன் என அவர்கள் வாரிசு ஒருவரின் தலையில் கைவைத்து சத்தியம் செய்யாமை.
- ❖ முன்னோர்கள் செய்த வைத்திய முறைகளை கற்றுக் கொள்வதில் அவர்களின் வாரிசுகள் ஆர்வம் காட்டாமை.
- ❖ சிங்கள மருத்துவத்திற்கு தேவையான மூலிகைகள் அழிந்து போனமை அல்லது தேடிக் கொள்வதில் உள்ள சிரமம்.
- ❖ ஆயுர்வேதம், சித்த மருத்துவம்இ யூனானி, ஆங்கில மருத்துவம் போன்றவற்றின் வருகை.

- முன்னோர்கள் வைத்தியக் குறிப்புக்களை எழுதி வைக்காமை.

**முடிவுரையும் பரிந்துரையும்**

ஆய்வுப் பிரதேசத்தில் சிங்களவர்களுக்கு மத்தியில் முன்பு காணப்பட்ட சிங்கள வைத்திய முறையானது இன்று இளைஞர்களுக்கு மத்தியில் உள்ள ஆர்வமின்மை காரணமாக மருவி வரும் நிலையை அவதானிக்க முடிகிறது. ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து சிங்கள வைத்திய முறைகளும் இன்று மேற்கொள்ளப்படுவதில்லை. அதாவது இப் பிரதேசத்தில் உள்ள நாட்டு வைத்தியர்கள் (வெதமஹத்தியா) அனைத்து வைத்திய முறையையும் அறிந்து வைத்துமில்லை. இப்பொழுதுள்ள இப் பிரதேசத்தில் உள்ள நாட்டு வைத்தியர்களின் வாரிசுகள் சிங்கள வைத்திய முறையை கற்றுக் கொள்வதில் ஆர்வம் இல்லை என்பதை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. எனவே ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள 04 நாட்டு வைத்தியர்களுக்குப் பின் யாரும் இவ் வைத்திய முறையை அறியமாட்டார்கள். இவர்களோடு இவ் வைத்திய முறை பட்டொழிந்து விடும் என்பது உண்மை. இவ் வைத்திய முறையை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

- நாட்டுவைத்தியர்கள் தம்முடைய வாரிசுகள் ஒருவருக்காவது இவ் வைத்திய முறையை சொல்லிக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.
- இளைஞர்களும் இவ் வைத்திய முறையை கற்றுக் கொள்வதில் ஆர்வம் செலுத்த வேண்டும்.
- சிங்கள வைத்தியமுறையை பதிவு செய்து அரசாங்கத்தின் மூலம் உதவி பெற்று வைத்திய நிலையமொன்றின் மூலம் இவ் வைத்திய முறையை மேற்கொள்வதற்கு முயற்சிக்கலாம்.
- சிங்கள வைத்தியமுறை தொடர்பாக இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டும்.
- அரசாங்கமும் சுதேச வைத்திய முறைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள நாட்டுவைத்தியர்களை அடையாளங் கண்டு அவர்களை சிங்கள வைத்தியமுறையை மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.

மேற்படி விடயங்களை ஆய்வுப் பிரதேசத்தில் மேற்கொள்வதன் மூலம் சிங்கள வைத்தியமுறையை மீண்டும் வினைத்திறனாக மேற்கொள்ள முடியும். இல்லாவிடின் குறிப்பிட்ட சில தலைமுறையோடு மறைந்து விடும் என்பது திண்ணம்.

**உசாத்துணைகள்**

பியசிரி அம்லசித் யாபா நீதானி ராஜபக்ஸ. (1995).தேசிய அத் பெஹெத்.பொல்ஙஸ்ஒவிட. சிகுரு பிரகாஸகயோ.

குணவர்த்தனஇடி.எஸ்.த.எஸ். (1994). ஸ்ரீ லங்காவே வைத்திய சாஸ்திர இதிஹாசய. கெலனிய சீலா பிரிண்டிங் வர்க்கஸ்.

டெனிஸ்டர்இஎல்இ பெரேரா. (2001). வட்டோருவ. நுகேகொட.சீமாசஹித தீபானி முத்ரன சஹ பிரகாசகயோ(புத்கலிக).

பீரிஸ் சில்ஙியர்ோஇ சி. (2017).Buddhism and medicine An Anthology Of Premodern Sources. Columbia University Press.

SriLankan traditional medicine. Retrived August 23,2011,from https://en.m.wikipedia.org.

சுதேச மருத்தவமுறை நலிவடைந்துள்ளது.Retrived September 24,2015, from http://kathiravan.com .

இலங்கையின் சுதேச மருத்துவத்திற்கு சர்வதேச சட்டப்பாதுகாப்பு அமைச்சர் ரி'ாட் பதியூதின் தெரிவுப்பு.Retrived July 13,2018, from http://srilankamuslims.lk.

ஆயுர்வேத மற்றும் சுதேச முறையின் முன்னேற்றத்திற்குத் தேவையான வளங்கள் குறைவின்றிப் பெற்றுக்கொடுக்கப்படும்-ஜனாதிபதி.Retrived from www.president.gov.lk .

2014 ஆம் ஆண்டுக்கான சுதேச வைத்திய அமைச்சு.Retrived fromwww.parliment.lk.

The Ministry Of Indigenous Medicine .Retrived fromwww.indigienousmedimini.com.

**நேர்காணல் மேற்கொள்ளப்பட்டவர்கள்**

1. D.G.சோமரத்ன.வயது(60)
2. K.G.சந்திராவதி.வயது(62)
3. K.G.ஜயவர்தன.வயது(59)
4. பிஸோமெனிக்கே.வயது(60)